RCoA
Royal College of Anaesthetists

Association of Paediatric Anaesthetists
of Great Britain and Ireland

# குட்டிக் கரடியின்

## மயக்க மருந்து அனுபவம்

### மயக்க மருந்து பெறுவதைப்பற்றி குழந்தைகளுக்கு விளக்கும் ஒரு சுவையான கதை




Trusted
Information
Creator
Patient Information Forum

பின் பக்கத்தில் உள்ள பெற்றோருக்கான
பரிந்துரைகளைப் படியுங்கள்




# வணக்கம், என் பெயர் குட்டிக் கரடி


சென்ற வாரம், மருத்துவமனையில் எனக்கு மயக்க மருந்து வழங்கப்பட்டது.

மயக்க மருந்து வழங்குதல் என்றால், ஒரு பரிசோதனையின்போது அல்லது ஓர் அறுவைச் சிகிச்சையின்போது நீங்கள் எதையும் உணராமல், கேட்காமல் அல்லது பார்க்காமல் இருப்பதற்காக ஒரு மருத்துவர் உங்களுக்கு ஒரு மருந்தை வழங்குவார். உண்மையில் அது ஓர் ஆழமான தூக்கத்தைப்போன்றது.

மருத்துவர் உங்களுக்கு எவ்வளவு நேரம் மயக்க மருந்து தேவையோ, அவ்வளவு நேரம் மயக்க மருந்து வழங்குவார். அவர் மயக்க மருந்து வழங்குவதை நிறுத்தும்போது, நீங்கள் விழித்தெழுந்துவிடுவீர்கள்.


என்னுடைய மயக்க மருந்து அனுபவத்தை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா?

எனக்குப் பிடித்த பொம்மை, ஜோ என்கிற வரிக்குதிரை, அந்தப் பொம்மை இங்கு ஒவ்வொரு பக்கத்திலும் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க நீங்கள் எனக்கு உதவுவீர்களா?



## தயாராதல்

நீங்கள் மருத்துவமனைக்குச் செல்லும்போது உங்களுடன் சில பொருட்களைக் கொண்டுசெல்வது நல்லது. நான் சில பைஜாமாக்கள், என்னுடைய பல் துலக்கி, ஒரு புத்தகம் மற்றும் எனக்குப் பிடித்த பொம்மையை எடுத்துக்கொண்டேன்.




## சாப்பிடக்கூடாது

மயக்க மருந்து வழங்கப்படும்போது உங்கள் வயிற்றில் எந்த உணவும் இருக்கக்கூடாது. அதனால், என்னால் எதையும் சாப்பிட இயலவில்லை. மிகவும் தாகம் எடுக்கக்கூடாது என்பதற்காக நான் தண்ணீர் மட்டும் குடித்தேன்.

# குட்டிக் கரடியின் மயக்க மருந்து அனுபவம்



# செவிலியரைச் சந்தித்தல்

மருத்துவமனையில், ஒரு **செவிலியர்** என்னுடைய எடையை அளவிட்டார். இந்த எடையை வைத்து எனக்கு எவ்வளவு மருந்து வழங்கலாம் என்று மருத்துவர்கள் பின்னர் தீர்மானிப்பார்கள்.




செவிலியர் என்னுடைய உடல் வெப்பநிலையைச் சரிபார்த்தார், என்னுடைய மணிக்கட்டில் ஒரு பெயர்ப் பட்டையைக் கட்டினார். இதன்மூலம், என் பெயர் **ரீஸ் கரடி** என்று எல்லாரும் தெரிந்துகொள்வார்கள்.



# வெவ்வேறு வகை மயக்க மருந்துகள்

நான் என்னுடைய **மயக்க மருந்து நிபுணரைச்** சந்தித்தேன். மயக்க மருந்து நிபுணர் என்பவர், மயக்க மருந்து வழங்கப்படும்போது என்னைக் கவனித்துக்கொள்கிற மருத்துவர் ஆவார். மயக்க மருந்துகளை உங்கள் கையில் ஒரு சிறிய குழாய்மூலம் கொடுக்கத் தொடங்கலாம் அல்லது ஒரு முகமூடியின்மூலம் கொடுக்கத் தொடங்கலாம். எனக்கு எந்த முறை நன்கு பொருந்தும் என்பது பற்றி நாங்கள் பேசினோம்.

அந்தச் சிறிய குழாயால் உங்கள் கையில் மிகவும் வலி ஏற்படாதபடி தடுப்பதற்காக, உங்கள் கைகளில் குழைவு பூசப்படலாம். மயக்க மருந்து அந்தச் சிறிய குழாய்க்குள் செல்கிறது. உண்மையில் அது மிக விரைவாகப் பணியாற்றுகிறது.






முகமூடி ஃபெல்ட்-டிப் பேனாவைப்போன்ற மணத்துடன் உள்ளது, அது வேலை செய்யச் சிறிது கூடுதல் நேரம் ஆகும். முகமூடி அணிந்தபிறகும், ஒருவேளை உங்களுக்குப் பின்னர் கூடுதல் மருந்துகள் தேவைப்பட்டால், உங்கள் கையில் ஒரு சிறிய குழாய் தேவைப்படும். ஆனால், முகமூடி அணிந்தபின் நீங்கள் எதையும் உணர இயலாது.




## குட்டிக் கரடியின் மயக்க மருந்து அனுபவம்




# அறுவைச் சிகிச்சைக்கான நேரம் நெருங்கிவிட்டது

என்னுடைய அறுவைச் சிகிச்சைக்கு முன்னதாக விளையாடுவதற்கு எனக்குச் சிறிது நேரம் இருந்தது. என்னுடைய செவிலியர் ஒரு மருத்துவமனை அங்கியை அணிந்துகொள்ளும்படி என்னைக் கேட்டார். சில குழந்தைகள் அதற்குப் பதிலாகப் பைஜாமா அணிந்திருந்தார்கள்.

மருத்துவப் பிரிவில் உங்களுக்குச் சில மருந்துகள் தரப்படலாம். இதன்மூலம், அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு உங்களுக்கு வலி உணர்வு ஏற்படாது அல்லத, அறுவைச் சிகிச்சைக்கு முன்னால் நீங்கள் தூக்கம் வருவதுபோல் உணர்வதற்கு அவை உதவலாம்.







## மயக்கமருந்து வழங்கும் அறை

மயக்க மருந்து வழங்கும் அறையில், எல்லா நேரங்களிலும் என்னைக் கவனித்துக்கொள்ள உதவுகிற **மானிட்டர்கள்** எனப்படும் கண்காணிப்பு இயந்திரங்கள் இருந்தன. என்னுடைய பெற்றோரில் ஒருவர் அந்த அறைக்குள் என்னுடன் வரலாம்.

அதன்பிறகு, நான் தூங்கிக்கொண்டிருந்தேன், என் பெற்றோர் எனக்காகக் காத்திருந்தார்கள். அவர்கள் தொலைவில் இல்லை என்று எனக்குத் தெரிந்திருந்தது.






## என்னுடைய அறுவைச் சிகிச்சையின்போது

எனக்கு எதுவும் நினைவில்லை, ஆனால், என்னுடைய மயக்க மருந்து நிபுணர் எப்போதும் என்னுடன் இருந்தார். அவர் என்னைக் கவனித்துக்கொண்டார், எனக்கு மயக்க மருந்து வழங்கினார்.

## குட்டிக் கரடியின் மயக்க மருந்து அனுபவம்





# நோய் மீட்டெழும் அறை

என்னுடைய அறுவைச் சிகிச்சை நிறைவடைந்ததும், மயக்க மருந்து நிபுணர் மயக்க மருந்தை அணைத்துவிட்டார், அதன்மூலம் நான் விழித்தெழலாம். நோய் மீட்டெழும் அறையில் ஒரு செவிலியர் என்னைக் கவனித்துக்கொண்டார், அதன்பிறகு என் பெற்றோர் என்னுடன் இருக்க இயன்றது.

தொடக்கத்தில் சிறிது வலி இருப்பதுபோல் நான் உணர்ந்தேன். உடனடியாக, செவிலியர் எனக்கு ஒரு மருந்தை வழங்கினார், விரைவில் நான் முன்பைவிட நன்றாக உணர்ந்தேன்.







## பசியை உணர்தல்

நான் மீண்டும் பசியை உணரத் தொடங்கியபோது, நான் உண்ணவும் குடிக்கவும் செவிலியர் அனுமதித்தார்.

அது எனக்கு நல்ல உணர்வை உண்டாக்கியது.

# மருத்துவமனையில் தங்குதல்

நான் ஓர் இரவு மருத்துவமனையில் தங்கவேண்டியிருந்தது. என்னுடைய பெற்றோரில் ஒருவர் என்னுடன் தங்கலாம்.






## வீடு செல்லும் நேரம்

மருத்துவமனையில் அனைவரும் மிகவும் அன்பாக
நடந்துகொண்டார்கள்,
ஆனால், வீடு திரும்பும் நேரம் வந்தபோது நான் மிகவும் மகிழ்ந்தேன்.

என்னுடைய இந்தப் படத்துக்கு நீங்கள் வண்ணம் தீட்டுவீர்களா?

# சென்றுவருகிறேன்!



# யார் யார், என்னென்ன





### மயக்க மருந்து நிபுணர்

இவர், உங்களுக்கு மயக்க மருந்தை வழங்கும் மருத்துவர். அதன்பிறகு, நீங்கள் மீண்டும் விழித்தெழவேண்டிய நேரம்வரை இவர் உங்களைக் கவனித்துக்கொள்வார்.

### செவிலியர்கள்

இவர்கள், உங்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படும்போது உங்களைக் கவனித்துக்கொள்கிற மக்கள்.






### விளையாட்டு வல்லுனர்

இவர் மருத்துவமனையில் நீங்கள் விளையாட உதவுகிறார், உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறார். அனைத்து மருத்துவமனைகளிலும் விளையாட்டு வல்லுனர்கள் இருப்பதில்லை.

### அறுவைச் சிகிச்சைத் துறைப் பின்பற்றுவோர்கள் (ODPகள்) மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்கச் செவிலியர்கள்

இவர்கள் உங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படும்போது மயக்க மருந்து நிபுணர் உங்களைக் கவனித்துக்கொள்வதற்கு அவருக்கு உதவுவார்கள்.








## அறுவைச் சிகிச்சை அரங்கம்

மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகிற ஓர் அறை. இங்கு அனைத்தும் மிகத் தூய்மையாக இருக்கும், இங்கு பணிபுரிகிற மக்கள் பைஜாமாக்களைப் போன்ற உடைகளை அணிந்திருப்பார்கள், தங்களுடைய தலைமுடியை ஒழுங்காக வைப்பதற்காகத் தொப்பி அணிந்திருப்பார்கள்.

## மானிட்டர் (கண்காணிப்பு இயந்திரம்)

இது, உங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படும்போது உங்களைக் கவனமாகப் பார்த்துக்கொள்வதற்காக மயக்க மருந்து நிபுணர் பயன்படுத்தும் ஓர் இயந்திரம். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துமுன் உங்கள் நெஞ்சில் சில ஸ்டிக்கர்கள் ஒட்டப்படும், உங்கள் கையில் ஒரு பற்றிருக்கி வைக்கப்படும், இதன்மூலம், உங்கள் இதயம் எவ்வளவு வேகமாகத் துடிக்கிறது, நீங்கள் எவ்வளவு நன்றாக மூச்சுவிடுகிறீர்கள் என்பதை மருத்துவர் கண்காணிப்பார்.



## நோய்மீட்டெழும் அறை அல்லது மயக்க மருந்து வழங்கப்பட்டபின் பராமரிப்பு வழங்கப்படும் பிரிவு (PACU)

இது, மயக்க மருந்து வழங்கப்பட்டபின் குழந்தைகள் விழித்தெழும் அறை.

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க.

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது




# இந்தச் சிற்றேட்டை எப்படிப் பயன்படுத்துவது

## பெற்றோருக்கான தகவல்

நீங்கள் உங்கள் குழந்தைக்கு இந்தச் சிற்றேட்டைப் படித்துக் காண்பிக்கலாம், தங்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படுவதற்கு அவர்கள் தயாராவதற்கு இது உதவும், அப்படிதான் நாங்கள் இந்தச் சிற்றேட்டை வடிவமைத்துள்ளோம். அவர்கள் சந்திக்கக்கூடிய சில மக்களை, அங்கு நிகழக்கூடிய சில விஷயங்களை இது அறிமுகப்படுத்தும். உங்கள் குழந்தையுடன் மருத்துவமனைக்குச் செல்லப்போகிறவர்கள் யாரோ, அந்த நபரை அல்லது நபர்களை இங்குள்ள ஓவியங்களில் வைத்து நீங்கள் விளக்கலாம். ஏனெனில், இது ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாறும். நீங்கள் இந்தக் கதையை உங்கள் குழந்தைக்கு ஏன் படித்துக்காண்பிக்கிறீர்கள் என்று உங்கள் குழந்தைக்கு விளக்குங்கள். இந்தக் கதை அவருக்கு எப்படித் தோன்றுகிறது என்பதைக் கண்டறிவதும், அவருக்கு ஏதேனும் கேள்விகள் உள்ளனவா என்று பார்ப்பதும் முக்கியம்.

உங்கள் குழந்தை தனக்குத் தெரிந்த ஒரு பொம்மையைப் பயன்படுத்தி இந்தக் கதையை நடித்துப் பார்க்கலாம் என்று நீங்கள் சொல்லலாம், அதன்மூலம் அவருக்கு இருக்கக்கூடிய எந்தக் கவலைகளையும் கையாளலாம். சில குழந்தைகள் தங்கள் உணர்வுகளைப் படமாக வரைவார்கள் அல்லது வண்ணம் தீட்டுவார்கள்.

உங்கள் குழந்தைக்கு மூன்று வயது தாண்டிவிட்டது என்றால், அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாக நீங்கள் அவரைத் தயார்செய்யவேண்டும் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம். மூன்று வயதுக்குக் குறைவான வயதுள்ள குழந்தைகளை மருத்துவமனைக்கு வருவதற்கு ஒரு நாள் முன்னதாகத் தயார் செய்யவேண்டும் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம். அதே நேரம், உங்கள் குழந்தையின் புரிந்துகொள்ளலைத் தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள்.

## நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்

இந்தச் சிற்றேட்டை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை நாங்கள் வரவேற்கிறோம். இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk


**ராயல் காலேஜ் ஆஃப் அனெஸ்தேடிஸ்ட்ஸ்**
**Royal College of Anaesthetists**
Churchill House
35 Red Lion Square
London WC1R 4SG
020 7092 1500


**rcoa.ac.uk**

## நான்காம் பதிப்பு, ஏப்ரல் 2023

வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இந்தச் சிற்றேடு மதிப்பாய்வு செய்யப்படும்.


**© 2023 ராயல் காலேஜ் ஆஃப் அனெஸ்தேடிஸ்ட்ஸ் மற்றும் கிரேட் பிரிட்டன் அயர்லாந்துக் குழந்தை மருத்துவ மயக்க மருந்து நிபுணர்கள் அமைப்பு**

நோயாளித் தகவல் வளங்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டைப் பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தைத் தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், பொருந்தும் ஒப்புகை வழங்கப்படவேண்டும், சின்னங்கள், பிராண்டிங் மற்றும் படங்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.



**படங்கள்: அமண்டா லில்லிவொய்ட்**